# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 06 | கத்தோலிக்கத் திருமறை | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................

**பகுதி– I**

❖ **பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. கிறிஸ்தவர்களின் பரிசுத்தமான நூல் எது?
 1) பரிசுத்த ஏடு 2) திருவிவிலியம் 3) குர்ஆன் 4) பகவத்கீதை

02. படைப்பின் ஒழுங்குமுறையில் நான்காம் நாளில் படைக்கப்பட்டது.
 1) வானமும் நீரும் 2) நிலமும் மரம் செடிகளும்
 3) சூரியன் சந்திரன் விண்மீன் 4) மனிதன்

03. இஸ்ரேயல் மக்களைத் துன்புறுத்திய அரசன்,
 1) ஏரோது 2) பிலாத்து 3) பார்வோன் 4) சவுல்

04. இடைவிடாமல் செபிக்கவேண்டும் என்பதற்கு இயேசு கூறிய உவமை,
 2) பரிசேயனும் வரிதண்டுபவனும் 2) நள்ளிரவில் அப்பம் கேட்ட நண்பன்
 3) ஊதாரிமைந்தன் 4) விதைப்பவன் உவமை

05. புகுமுக அருளடையாளம் அல்லாதது எது?
 1) திருமுழுக்கு 2) நற்கருணை 3) உறுதிப்பூசுதல் 4) ஒப்புரவு

06. டொமினிக் குஸ்மான் எந்த நாட்டைச் சேர்ந்தவர்,
 1) ஸ்பானியா 2) கார்மேல் மலை 3) சீனாய் மலை 4) ஒலிவமலை

07. இயேசுவுக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டது?
 1) மூன்றாம் நாள் 2) எட்டாம் நாள் 3) நாற்பதாம் நாள் 4) ஐம்பதாம் நாள்

08. நற்கருணை புதுமை நடைபெற்ற காலம்,
 1) கி.பி.900 2) கி.பி.800 3) கி.பி.600 4) கி.பி.700

09. புனித ஸ்தேவான் கொல்லப்பட்ட விதம்,
 1) சிலுவையில் அறைந்து 2) சிரச்சேதம் செய்து
 3) தலைகீழாக தொங்கவிட்டு 4) கல்லால் எறிந்து

10. ஆவணி 15ம் திகதி மரியன்னைக்குக் கொண்டாடப்படும் விழா,
 1) மரியன்னையின் விண்ணேற்பு விழா 2) மரியன்னையின் பிறப்பு விழா
 3) அமல உற்பவ விழா 4) காணிக்கை மாதா விழா

(2X10=20 புள்ளிகள்)

**02. சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.**

1. நோவாவும் வெள்ளப்பெருக்கும் தொடக்கநூலில் கூறப்பட்டது. ( )
2. புனித லூக்கா இயேசுவின் திருத்தூதர். ( )
3. ஞாயிறு தினத்தில் இயேசுவின் உயிர்ப்பை நினைவு கூருகின்றோம். ( )
4. இயேசுவின் பிறப்பு முதல் முதல் ஞானிகளுக்கு அறிவிக்கப்பட்டது. ( )
5. திருவிவிலியம் இறைஏவுதலால் எழுதப்பட்ட நூலாகும். ( )
6. யோவான் நற்செய்தியின் அடையாளம் கழுகு ஆகும். ( )
7. இயேசு குருத்துவத்தை ஏற்படுத்தியது பெரிய வியாழன். ( )
8. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு குலமுதுவர்கள் ஆவர். ( )
9. சிலை வழிபாடு இரண்டாம் கட்டளைக்கு எதிரான பாவம். ( )
10. அருளடையாளங்கள் எமக்கு அவசியமில்லை. ( )

(2X10=20 புள்ளிகள்)

**03. பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக.**

**(இஸ்ராயேல் / உயிர்மூச்சை / கதிரவனை / உயிர்ப்பை / பகைவரையும்)**

1. கடவுள் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் ................................ உதித்தெழச் செய்கிறார்.
2. பாவத்தில் விழுந்த மனிதனை மீட்க இறைவன் ....................... இனத்தைத் தெரிந்தெடுத்தார்.
3. நாம் எம்மைப்போல் ...................................... அன்பு செய்ய வேண்டும்.
4. கடவுள் மனிதனை உருவாக்கி அவன் நாசிகளில் ..................................................... ஊதினார்.
5. பாஸ்கா கால மூவேளைச் செபத்தில் இயேசுவின் .......................... நினைவு கூருகின்றோம்.

(5X2=10 புள்ளிகள்)

LMDMUnit

## பகுதி-II

➢ **விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. அ. ஐந்நூலில் அடங்கும் நூல்கள் இரண்டு தருக.
   ஆ. புதிய ஏற்பாட்டு நூல்கள் மூன்று தருக.
   இ. திருவிவிலியத்தை புனிதமாகப்பேண நீர் மேற்கொள்ளும் செயல்முறைகள் ஐந்து தருக
   (2+3+5 =10 புள்ளிகள்)

2. அ. பணிவாழ்வின் அருளடையாளங்கள் இரண்டு தருக.
   ஆ. குருத்துவத்தின் நிலைகள் மூன்றையும் தருக?
   இ. குருக்களின் பணிகள் ஐந்து தருக? (2+3+5 =10 புள்ளிகள்)

3. அ. திருமுழுக்கின்போது பயன்படுத்தும் பொருட்கள் இரண்டு தருக.
   ஆ. திருமுழுக்கினால் பெறும் அருள்கள் மூன்று தருக.
   இ. நோயிற்பூசுதல் அருளடையாளத்தைப் பெற்றுக்கொடுக்கும் இடத்தை நீர் எவ்வாறு ஆயத்தம் செய்வீர். (2+3+5 =10 புள்ளிகள்)

4. அ. மரியன்னையை அழைக்கும் வேறு பெயர்கள் இரண்டு தருக.
   ஆ. இலங்கையில் கத்தோலிக்கருக்குரிய கடன்திருநாட்கள் மூன்று தருக.
   இ. ஓய்வு நாளில் நீர் செய்யக்கூடிய செயல்கள் ஐந்து தருக. (2+3+5 =10 புள்ளிகள்)

5. அ. செபத்தின் பண்புகள் இரண்டு தருக.
   ஆ. பொதுச் செபங்கள் மூன்று தருக.
   இ. நீங்கள் செபிக்கும் சந்தர்ப்பங்கள் ஐந்து தருக. (2+3+5 =10 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
   அ. புனித 2ம் அருளப்பர் சின்னப்பர்
   ஆ. படைப்பு
   இ. திருவிவிலியம்
   ஈ. அருளடையாளம்

   (5+5=10 புள்ளிகள்)

LMDMUnit